மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

OS.No.30/2022

2024-ம் ஆண்டு மார்ச் திங்கள் 04-ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4-ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சார்லி (PW1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

நாள்.04.03.2024

வா.சா.1

முதல் விசாரணை :-

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள விபரம் எனக்கு தெரியும்.

எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1. 18.05.1992ம் தேதி வாதிகளின் தாயார் பாத்திமா ராஜேஸ்வரிக்கு நாகமுத்து என்பவர் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின அசல் வா.சா.ஆ.1 ஆகும்.

2. 13.11.2018ம் தேதியில் வாதிகளின் தாயார் பாத்திமாக ராஜேஸ்வரி வாதிகளுக்கு எழுதிக்கொடுத்தத இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் அசல் வா.சா.ஆ.2 ஆகும்.

3. வாதிகளின் பெயரில் ஏற்பட்ட 10(1) பட்டா கணினி நகல் வா.சா.ஆ.3 ஆகும்.

4. 09.12.2010-ம் தேதியில் 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட வரி ரசீது அசல் வா.சா.ஆ.4 ஆகும்.

5. 16.11.2021-ம் தேதியில் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு நகல் வா.சா.ஆ.5 ஆகும்.

6. 08.09.2010-ம் தேதியில் 2, 3 பிரதிவாதிகளுக்கு நாகமுத்து எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் கணினி நகல் வா.சாஆ.6 ஆகும்.

7. வாதிகள் தரப்பில் இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலரிடம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு நகல் வா.சா.ஆ-7 ஆகும்.

8.24.01.2024ம் தேதி சர்வே எண்.211/4C 5C என்ற எண்ணிலிருந்து தற்போது உட்பிரிவு படி புலஎண்.211/19 என மாறியதற்கான வில்லங்க சான்றிதழ் கணினி நகல் வா.சா.ஆ.8 ஆகும்.

பிராதுபடி தீர்ப்பாக வேண்டிக்கொள்கிறேன்.

ஒம்/-S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்